RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 213 | ஆகஸ்டு.5 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## வைகை அணையில் 2ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை: தொடர் கண்காணிப்பில் அதிகாரிகள்

ஆண்டிபட்டி: ஆக.5-

வைகை அணையின் நீர்மட்டம் 68.5 அடியாக உயர்ந்ததைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப் பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை நெருங்கும் நிலை உள்ளதால் நீர்வளத்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.



தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களின் முக்கிய குடிநீர் மற்றும் பாசன நீர் ஆதாரமாக வைகை அணை உள்ளது. தற்போது கேரள, தமிழக எல்லையில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் மூல வைகையில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் முல்லைப் பெரியாறு அணையில் இருந்தும் விநாடிக்கு 1,867 கனஅடி நீர் கடந்த 20ம் தேதி முதல் தொடர்ந்து திறந்து விடப்பட்டு வருகிறது.

இதனால் வைகை அணைக்கான நீர் வரத்து அதிகரித்தபடி இருந்தது. இந்நிலையில் ஜூலை 20ம் தேதி 63.77 அடியாக இருந்த நீர்மட்டம் (மொத்த உயரம் 71) படிப்படியாக அதிகரித்து 26ம் தேதி 66 அடியை எட்டியது. இதனைத் தொடர்ந்து முதல் வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தற்போது மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பெரியாறு பிரதான கால்வாய் பாசனப் பகுதியில் உள்ள இரு போக பாசன நிலங்களின் முதல் போகம் மற்றும் குடிநீர் திட்டங்களுக்காக விநாடிக்கு 769 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் தொடர் நீர்வரத்தினால் அணையின் நீர்மட்டம் இன்று (ஆக.4) 68.50 அடியை எட்டியது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது. 69 அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்ததும் மூன்றாம் கட்ட எச்சரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்படும்.

இது குறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், "தற்போது விநாடிக்கு ஆயிரத்து 594 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் விரைவில் 69 அடியை எட்டிவிடும். இருப்பினும் நீர்வரத்துக்கு ஏற்ப நீர்மட்டத்தை 69 அல்லது 71 அடியில் நிலை நிறுத்தப்படும். இந்நிலையில் மூன்றாம் கட்ட அபாய எச்சரிக்கைக்குப் பிறகு எந்த நேரமும் உபரி நீர் திறக்க வாய்ப்புள்ளதால் 5 மாவட்டத்தின் கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்" என்று அதிகாரிகள் கூறினர்.

## துணை மின்நிலைய பணியாளர்கள் வேலை நேரத்தில் வெளியே செல்லக் கூடாது: மின்வாரியம் எச்சரிக்கை

சென்னை, ஆக.05-

துணை மின்நிலைய பணியாளர்கள் வேலை நேரத்தில் துணை மின் நிலைய வளாகத்தைவிட்டு வெளியே செல்ல கூடாது என மின்வாரியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மின் தொடரமைப்பு கழகம் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: உயர் அழுத்த துணை மின்நிலையங்களில் தொடர்ந்து மின் சார உபகரணங்களை கண்காணிப்பது, அவசர காலங்களில் விரைவாக செயல்பட்டு மின் வழித் தடங்களை சீரமைப்பது, மின்தடை நேரங்களில் உடனடியாக செயல்பட்டு மின்விநியோகம் வழங்குவது ஆகிய பணிகளை துணை மின்நிலைய பணியாளர்கள் மேற்கொள்கின்றனர்.

இவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வரும் நிலையில், சில நேரங்களில் ஒரே நேரத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக பணியாளர்கள் இருப்பதாகவும், ஒரு சிலர் கூடுதலாக பணியை நீட்டித்து வேலை செய்வதாகவும், பணி நேரத்தின் போது வெளியே சென்று வருவதாகவும் புகார்கள் வந்துள்ளன. இது மின் பகிர்மானத்தின் செயல் திறனை குறைப்பதோடு, பணியாளர் நலனையும் பாதிக்கிறது.

பணியாளர் அட்டவணை: இதை தடுக்க, பின்வரும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். துணை மின் நிலைய பணியாளர்கள் அட்டவணையை செயற் பொறியாளர் தயாரிக்க வேண்டும். அதன்படி மட்டுமே பணியாளர்கள் வருவதை உறுதி செய்ய வேண்டும். கூடுதல் நபர்கள் பணியாற்றுவதை அனுமதிக்க கூடாது. இது அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப பணியாற்றுவதாக மாறிவிடும். பணி நேரத்தின்போது, துணை மின் நிலைய வளாகத்தைவிட்டு பணியாளர்கள் வெளியே செல்ல கூடாது.

பராமரிப்பு உதவி செயற்பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் உச்ச நேரங்கள் மற்றும் அவசர காலங்களில் துணை மின்நிலைய பணியாளர்களுக்கு உதவ வேண்டும். இந்த அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை முதன்மை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். இதில் கவனக்குறைவாக இருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ராமேசுவரம் அக்னி தீர்த்த கடலில் அமைகிறது படகு இல்லம் சுற்றுலா

ராமேசுவரம், ஆக.05-

ரூ.7.88 கோடி மதிப்பீட்டில் ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் படகு இல்லம் சுற்றுலா திட்டத்தை அறிமுகப்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ராமேசுவரம் ஆன்முக தலமாக மட்டுமின்றி, சிறந்த சுற்றுலா தலமாகவும் மாறி வருகிறது. இங்குள்ள ராமநாத சுவாமி கோயில், பாம்பன் பாலம், தனுஷ்கோடி கடற்கரை, விவேகானந்தர் இல்லம், அப்துல் கலாம் நினைவகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை காண்பதற்காக ஆண்டுதோறும் 4 கோடி பேர் வருகின்றனர்.

ராமேசுவரத்துக்கு வரும் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் கேரளாவைப்போல படகு இல்லம் சுற்றுலாவை அறிமுகப்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடற்கரை அருகே ரூ.7.88 கோடி மதிப்பீட்டில் படகு இல்லம் கட்டடப்பட்டு வருகிறது.

ராமேசுவரம் அக்னி தீர்த்த கடற்கரையிலிருந்து கோதண்ரட ராமர் கோயில் வழியாக தனுஷ்கோடி வரையிலும், அக்னி தீர்த்த கடற்கரையிலிருந்து வில்லூண்டி தீர்த்தம் வழியாக பாம்பன் குருசடை தீவு ஆகிய இடங்களுக்கும் முதல் கட்டமாக படகு இல்லம் சுற்றுலா நடத்துவதற்கு கடல்சார் வாரியம் திட்டமிட்டுள்ளது.

இந்த படகு இல்லம் சுற்றுலா மூலம் கடல் பரப்பில் காணப்படும் கடல் புறா, கொக்கு, நெடுங்கால் உள்ளான், நத்தைகொத்தி நாரை, கூழைக்கடா, தாரா, கரண்டிவாயன், நீர்க்காகம், பிளமிங்கோ, தேன் பருந்து, கடல்பருந்து உள்ளிட்ட பறவைகளை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க முடியும். மேலும், படகின் அடியில் பொருத்தப்படும் கண்ணாடி வழியாக பவளப்பாறைகள், கடல் வாழ் உயிரினங்களை காண முடியும். படகிலேயே இரவில் தங்குவதற்கும், மிதக்கும் உணவகம் ஏற்படுத்தவும் கடல்சார் வாரியம் திட்டமிட்டுள்ளது.

# டிஜிபி நியமனத்தில் விதிமீறல் இருந்தால் நீதிமன்றம் தலையிடும்: தமிழக அரசுக்கு நீதிபதிகள் எச்சரிக்கை

மதுரை: ஆக.5-

டிஜிபி நியமனத்தில் முறைகேடு, விதிமீறல் இருந்தால் நீதிமன்றம் தலையிடும் என தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற கிளை நீதிபதிகள் எச்சரித்துள்ளனர்.





ராமநாதபுரம் ராஜ வீதியைச் சேர்ந்த யாசர் அராபத், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் ஆகஸ்ட் 31ல் ஓய்வு பெறுகிறார். அடுத்த டிஜிபி பதவிக்கான தகுதி வாய்ந்த ஐபிஎஸ் அதிகாரிகளின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு தமிழக அரசு இதுவரை அனுப்பவில்லை. தற்போதைய டிஜிபிக்கு பணி நீட்டிப்பு வழங்கப்படவும், அவரை பொறுப்பு டிஜிபியாக நியமிக்கவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு செய்வது டிஜிபி நியமனம் தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. தமிழகத்தில் 2026ல் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசு உயர் பதவிகளில் தங்களுக்கு சாதகமானவர்களை வைத்துக்கொள்ள தமிழக அரசு விரும்புகிறது. தமிழகத்தில் ஆணவக் கொலை, கொலை, கொள்ளை போன்ற அச்சமூட்டும் சம்பவங்கள் அதிகரித்து வரும் சூழலில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட டிஜிபி பணியிடம் முறையாக நிரப்பப்பட வேண்டியது அவசியம்.

எனவே தற்போதைய டிஜிபி சங்கர் ஜிவாலை ஓய்வுக்கு பிறகு, பொறுப்பு டிஜிபியாக நியமிக்கவும், சங்கர் ஜிவாலின் பணிக் காலத்தை நீட்டிப்பு செய்யவும் இடைக்கால தடை விதித்தும், டிஜிபி பதவிக்கு தகுதியான ஐபிஎஸ் அதிகாரிகளின் பட்டியலை தமிழக அரசு உடனடியாக தயார் செய்யவும் உத்தரவிட வேண்டும்" என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியா கிளாட் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலையை கருத்தில் கொண்டு புதிய டிஜிபி நியமனம் தொடர்பான நடைமுறைகளை உடனடியாக தொடங்க உத்தரவிட வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், டிஜிபி நியமனம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் 2006ல் பிரகாஷ் சிங் வழக்கில் வழிகாட்டுதல்களை பிறப்பித்துள்ளது. இந்த வழிகாட்டுதல்களை 2019ல் நீதிபதி தீபக் மிஸ்ரா தெளிவுபடுத்தியுள்ளார். டிஜிபி பதவியை சீனியர்களுக்கு தான் வழங்க வேண்டும் என நீதிபதி நாகேஸ்வர ராவ் கூறியுள்ளனர். டிஜிபி நியமனம் தொடர்பாக மத்திய அரசு பணியாளர் தேர்வாணையமும் வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.

இருப்பினும் இந்த வழிகாட்டுதல்களை தமிழகம் உட்பட பல மாநிலங்கள் பின்பற்றுவது இல்லை. எனவே டிஜிபி நியமனத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்படுகிறது ? என்பது தொடர்பாக அரசு தரப்பில் விளக்கம் அளிக்க வேண்டும். இதில் முறைகேடு, விதிமீறல் இருந்தால் நீதிமன்றம் தலையிடும். மனு தொடர்பாக மத்திய உள்துறை செயலர், தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் உள்துறை செயலாளர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஆக.11ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தவிட்டனர்.

## மதுரையில் கஞ்சா கடத்தும் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு 3 நாளில் 24 பேர் கைது

மதுரை, ஆக.05-

தமிழகத்தில் கஞ்சா மற்றும் போதைப் பொருட்களைத் தடுக்க ஒவ்வொரு வாரமும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காவல் துறையினர் சிறப்பு சோதனைகளில் ஈடுபடுகின்றனர். மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் ஆலோசனையின்பேரில் வெளி மாநிலங்களில் இருந்து மதுரைக்கு வரும் தனியார், அரசு பேருந்துகள், ரயில்களில் சோதனை நடத்தப்படுகிறது. தொடர்ந்து, சட்டம்ஒழுங்கு மற்றும் மதுவிலக்கு பிரிவு போலீஸார் இணைந்து வெளிமாநில பேருந்துகள் வரும் முக்கியச் சாலைகளில் கடந்த 3 நாட்களாக தீவிர தோதனை நடத்தினர்.



இந்நிலையில், திண்டுக்கல்லில் இருந்து மதுரை வந்த பேருந்து ஒன்றில் 4 பேர் கஞ்சா கடத்தி வருவதாக கிடைத்த தகவலின் பேரில் நேற்று முன்தினம் பாத்திமா கல்லூரி அருகே போலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது அரசுப் பேருந்து ஒன்றிலிருந்து இறங்கிய 4 பேரது உடைமைகளை சோதனையிட்டனர். இவர்கள் மதுரைக்கு கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது.

விசாரணையில், மதுரையைச் சேர்ந்த ஜஸ்டின் பிரபாகரன் (23), சிவராம பாண்டியன் (22), அருண் பாண்டியன் (26), பிரத்வி ராஜ் (26) எனத் தெரிய வந்தது. இவர்களிடமிருந்து 2 ஆயிரம் கிலோ கஞ்சாவையும் போலீஸார் பறிமுதல் செய்தனர். தொடர் விசாரணையில், ஒடிசா மாநிலத்திலிருந்து மதுரைக்கு கஞ்சா கடத்தி வந்து, இங்குள்ள சில இளைஞர்களை ஒரு நெட்வொர்க்காக இணைத்து கஞ்சா விற்பதும் தெரியவந்தது.

இவர்கள் அளித்த தகவலின் பேரில் கூடல்புதூர் பகுதியில் கோகுல் (21), சக்திவேல் (21), ஈஸ்வரன் (20), ஆதீஸ்வரன் (29), வேல்முருகன் (21) மற்றும் 17 வயதுடைய 2 சிறுவர்கள் உட்பட மொத்தம் 24 பேரை மதுரை மாநகர மதுவிலக்கு காவல் ஆய்வாளர் சேதுமணி மாதவன் தலைமையிலான போலீஸார் கைது செய்தனர். மேலும், 30 கிலோ கஞ்சா, தலா ஒரு பைக், லாரி, 12 செல்போன்கள், 10 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து மதுவிலக்கு போலீஸார் கூறியதாவது: கஞ்சா கடத்தலில் கைதான 24 பேருமே இளைஞர்கள். இவர்கள் சிறையில் இருந்தபோது நண்பர்களாக பழகி, வெளிமாநிலங்களில் கஞ்சா விற்கும் நபர்களிடம் தொடர்பை ஏற்படுத்தி கடத்துகின்றனர். பெரும்பாலும் ஒரே வாகனத்தில் பயணிக்காமல் ஆங்காங்கே இறங்கி வெவ்வேறு லாரி, பேருந்துகளில் பயணித்து வருகின்றனர்.

மதுரை வந்ததும் ஏற்கெனவே கஞ்சா விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களை இணைத்து நெட்வொர்க் ஏற்படுத்தி, அதன்மூலம் பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சா, போதைப் பொருட்களை விற்றுள்ளனர். கஞ்சா கடத்தலை தடுக்க சோதனைகள் தொடரும். முன்பெல்லாம் கஞ்சா கடத்தலில் 40 வயதுக்கு மேற்பட்டோர்தான் ஈடுபட்டனர்.

தற்போது 17 வயது சிறுவர்கள் முதல் 30 வயதுக்கு ள்ளான இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் கஞ்சா கடத்தலில் ஈடுபடுகின்றனர். இதற்குப் போதைப் பழக்கத்துக்கு அடிமையானது மற்றும் குறுக்கு வழியில் பணம் சாம்பாதிக்க வேண்டும் என்ற தவறான எண்ணம் சிலரிடம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பெட்ரோல், டீசல் விலை உயரும் ஆபத்து

புதுடெல்லி, ஆக.05-

ரஷ்யாவிடம் வர்த்தக உறவு வைத்துள்ள இந்தியாவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளதன் எதிரொலியாக இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்புள்ளது என்று வெளிவரும் செய்திகள் கவலையளிக்கின்றன.



ரஷ்யாவும் உக்ரைனும் கடந்த 2022ம் ஆண்டு முதல் போரில் ஈடுபட்டு வருகின்றன. ரஷ்யா இரண்டு வாரங்களுக்குள் போரை நிறுத்தாவிட்டால், ரஷ்யாவுடன் வர்த்தக உறவு வைத்துள்ள நாடுகளுக்கு 25 சதவீத கூடுதல் வரி மற்றும் அபராத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனால், இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

உலகில் அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ள நிலையில், ரஷ்யா - உக்ரைன் போரின் போது ரஷ்யாவுக்கு எதிராக மற்ற நாடுகள் வர்த்தக தடை விதித்ததை இந்தியா பயன்படுத்திக் கொண்டது. 2022க்கு முன்பு 0.2 சதவீதம் என்ற அளவில் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கிக் கொண்டிருந்த இந்தியா குறைந்த விலையில் கிடைப்பதை பயன்படுத்தி, 35 முதல் 40 சதவீதம் வரை தற்போது கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது.

அமெரிக்க அதிபரின் மிரட்டலையடுத்து, மாற்று வழியை சிந்திக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. கூடுதல் வரி விதித்தால் மாற்று வழி என்ன இருக்கிறது என்று தெரிவிக்கும்படி அதிகாரிகளிடம் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதற்கான எந்த உத்தரவையும் மத்திய அரசு பிறப்பிக்கவில்லை.

இதுபோன்ற சிக்கலான சூழ்நிலையில், கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. தற்போது கச்சா எண்ணெய் பேரல் ஒன்றுக்கு 72 முதல் 76 ரூபாய் வரை கிடைக்கிறது. வரிவிதிப்பு, அபராதம் போன்ற விவகாரங்களால் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது. விலை 100 முதல் 120 வரை உயர வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர். தற்போது குறைந்த விலைக்கு கச்சா எண்ணெய் வாங்கி வரும் இந்தியா மீண்டும் அரபு நாடுகளிடம் இருந்து கூடுதல் விலைக்கு கச்சா எண்ணெய் வாங்கும் நிலை ஏற்படும்.

இதனால், உற்பத்திச் செலவு அதிகரித்து பெட்ரோல், டீசல் விலை உயரும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை தான் மக்களின் போக்குவரத்து, சரக்குகள் இடம்பெயர்தல் உள்ளிட்ட அனைத்திற்கும் ஆதாரம் என்பதால் அதன் பாதிப்பு மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கும் வழிவகுக்கும்.

அதன் தொடர்ச்சி பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட அனைத்திலும் எதிரொலிக்கும் என்பதால், சவாலாக அமைந்துள்ள இந்த விவகாரத்தை சாதாரண பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் மத்திய அரசு கையாண்டு நாட்டின் வளர்ச்சியை தக்க வைக்க வேண்டும்.



■ திருப்பூர் மாவட்டம் குளத்துப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட காளிபாளையம் பகுதியில் நீண்ட நாட்களாக முடங்கிகிடந்த அரசு நூற்பாலையை சிப்காட் நிறுவனம் கையகப்படுத்தியதை தொடர்ந்து ஊர் பொதுமக்கள் தொடர் போரட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் மேலும் போரட்டக்குழுவினருடன் விவசாய சங்கத்தினரும் இணைந்து போராடி வருகின்றனர். இதற்க்கான அலுவலகம் நேற்று திறப்பு விழா செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஊர் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர். மேலும் திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சரிடம் கோரிக்கை மனுஅளிக்க உள்ளனர்.

## தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் இந்திய ராணுவத்தில் ஆஹீர் ரெஜிமெண்ட் யாதவர் பிரிவு அமைக்க கோரி யாதவர்கள் புனித மண் கலச வாகன பேரணி

முடிச்சூர், ஆக்.05-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூரில் தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் இந்திய ராணுவத்தில் ஆஹீர் ரெஜிமெண்ட் யாதவர் பிரிவு அமைக்க கோரி யாதவர்கள் புனித மண் கலச வாகன பேரணியை அனைத்து இந்திய யாதவர் தமிழ்நாடு பொதுச் செயலாளர் எம்.பி குணா, தலைமையில் பி.செந்தில்குமார் மற்றும் வெங்கட்ராமன் ஆகியோர் இந்த பேரணி நடைபெற்றது சிறப்பு அழைப்பாளர்களாராக எல்லார் செழியன் கலந்து கொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்தார்.



இதில் ஸ்டார் பிரபா, ரங்கா நகர் குணசேகரன், முன்னாள் ராணுவவீரர் விஜயகுமார், தில்லை ராஜ், வழக்கறிஞர் சரவணன், கோபிநாத், பெருங்களத்தூர் தனசேகர், எஸ்.சுரேஷ், எம்.செந்தில் குமார், எம்.மாணிக்கம், ரங்கா நகர் ராஜேந்திரன், மூர்த்தி, ஜெகதீப், தாழம்பூர் ஜெய் கணேஷ், திருப்போரூர் குணா, கண்ணன், எல்.பாலாஜி, கார்த்திக், பிரகாஷ், ஹரி விக்னேஷ், சந்தோஷ், வாசுதேவன், மணிகண்டன் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர் பின்னர் அதனை தொடர்ந்து முடிசூரிரில் இருந்து பேரணியாக புறப்பட்டு தாம்பரம், செம்பகாக்கம், மேடவாக்கம், ஓ.எம்.ஆர் சாலை உள்ளிட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் பேரணியாக சென்றனர் இதில் தமிழ்நாடு யாதவர் மகா சபை சார்பில் அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், இரணியம் ஊராட்சி ஜாங்கிட் நகரில் உள்ள கன்னிக்குடி கண்மாயில் தனியார் பங்களிப்புடன் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டு மியாவாக்கி முறையில் 5000 மரங்கள் நடும் மரக்கன்றுகளை நட்டு வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின் குமார் இ.ஆ.ப, , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்டேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தேனி, ஆக.05-


தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்ட ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் உணவு பாதுகாப்புத் துறையால் அனுமதிக்கப்படாத பிளாஸ்டிக் ஆகியவற்றை உணவு பரிமாறவும், பார்சல் செய்யவும் பயன்படுத்தாமல் மக்கும் தன்மையுள்ள பொட்டலமிடும் பொருட்களை உணவு விநியோகிக்கவும் பார்சல் செய்யவும் பயன்படுத்தும் மிகச்சிறந்த உணவகங்களுக்கு தமிழ்நாடு அரசின் உணவு பாதுகாப்புத்துறையால் விருது வழங்கப்பட உள்ளது. இவ்விருதானது, பெரிய வகை உணவகங்களுக்கு, அதாவது வருடாந்திர விற்றுக் கொள்முதல் ரூ.12 இலட்சத்திற்கும் மேற்பட்ட உணவு வணிகர்களுக்கு ரூ.1 இலட்சம் தொகையுடன் கூடிய விருதும், தெருவோர வணிகர்கள் உள்ளிட்ட சிறு வணிகர்களுக்கு ரூ.50,000/ தொகையுடன் கூடிய விருதும் வழங்கப் படவுள்ளது.

இவ்விருது பெற விண்ணப்பதாரர் உணவு பாதுகாப்புத்துறையின் உரிமம், பதிவுச் சான்றிதழ் பெற்று நடப்பில் இருக்க வேண்டும். விண்ணப் பதாரரின் உணவகத்தில் குறைந்தபட்சம் ஒரு நபர் உணவு பாதுகாப்பில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். விண்ண ப்பதாரரின் உணவகத்தில் அனைத்து பணியாளர்களுக்கும் தொற்றுநோய்த் தாக்கமற்றவர்கள் என்பதிற்கான மருத்துவச் சான்று அவசியம் இருக்க வேண்டும். விண்ணப் பதாரரின் உணவகத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரக த்தினால் அங்கீகரி க்கப்பட்ட நிறுவனம் மூலம் சுகாதாரத் தணிக்கை கக்கான சுகாதார மதிப்பீட்டுச் சான்று (Hygiene Rating) மற்றும் அதிக ஆபத்துள்ள உணவு வணிக வகைக்கான தணிக்கை (High Risk Audit by Third-Part Audit Agency) அறிக்கை வைத்திருக்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர் தமது உணவகத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையரகத்தினால் வழங்கப்பட்டுள்ள சரிபார்ப்பு பட்டியல் மூலம் தாமே தணிக்கை மேற்கொண்டு, அதனை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்விருது பெற விருப்பமுள்ள தகுதியான உணவு வணிகர்கள் ஆகஸ்ட் மாத இறுதிக்குள்(31.08.2025) உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்யலாம். அவ்விண்ணப்பங்களை நியமன அலுவலர் உள்ளடக்கிய குழுவினர் பரிசீலனை செய்து, உணவகத்தினைகளை ஆய்வு செய்து, தமது பரிந்துரையை உணவு பாதுகாப்புத்துறை ஆணையருக்கு சமர்ப்பிக்கும். பின்னர் மாநில அளவிலான பரிசீலனை குழு பரிசீலித்து மாவட்டத்திற்கு தலா ஒரு பெரிய உணவகத்தையும், சிறு உணவகத்தையும் சிறந்த உணவகங்களாக தேர்ந்தெடுக்கும் .

எனவே, அனைத்து உணவு வணிகர்களும் மக்கும் தன்மையுள்ள பொருட்களைப் பயன்படுத்தி, சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த உதவுவதுடன், தமிழ்நாடு அரசின் உணவு பாதுகாப்புத் துறையின் விருதை பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, மாஸ்டர் ப்ளான் காம்ப்ளக்ஸ், பொது சுகாதார அலுவலகம் பின்புறம். தேனி மாவட்டம் - 625 531 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது 04546 252549 என்ற தொலைப்பேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.



■ மதுரை விருந்தினர் மாளிகையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத் தலைவர் கிஷோர் மக்வானா அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின் குமார் புத்தகம் கொடுத்து வரவேற்றார்.

## மதுரை மாநகராட்சி சார்பில் மூன்று நாட்கள் ”இசையோடு ருசியோடு விளையாடு” நம்ம ஊரு திருவிழா! நமக்கான பெருவிழா! நடைபெறுகிறது

மதுரை, ஆக.05-

மதுரை மாநகராட்சி மற்றும் ஹலோ ஈவன்ட்ஸ் இணைந்து தமுக்கம் மைதானத்தில் எதிர்வரும் 15.08.2025 முதல் 17.08.2025 வரை மாலை 4 மணி முதல் 9 மணி வரை மூன்று நாட்கள் ”இசையோடு ருசியோடு விளையாடு நம்ம ஊரு திருவிழா, நமக்கான பெருவிழா”என்ற தலைப்பில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இந்த உணவுத் திருவிழாவில் தினந்தோறும் மாலை 4 மணி முதல் பல்வேறு விளையாட்டுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், டுரிங்டாக்கிஸ், ஆயாகடை சாயாகடை, மதுரை சிறப்பு உணவுகள், பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் என குடும்பமாய், குதுகலமாய் ஒன்றாய் சேர்ந்து கொண்டாடும் வகையில் சிறப்பாக நடைபெற உள்ளது. மேலும் கலைத்திறமை உள்ள குழந்தைகளுக்க டேலண்ட் ஹண்டர்ஸ் அகாடமி மூலம் மாறுவேட போட்டி, நடன போட்டி, ஓவிய போட்டி, கோலப் போட்டி, ஒரு நிமிட கலைத்திறன் போட்டி உள்ளிட்ட பலவேறு போட்டிகள் நடைபெற இருக்கிறது.

மதுரை மாநகராட்சி இசையோடு ருசியோடு விளையாடு நம்ம ஊரு திருவிழாவில் போட்டிகள் நடத்தவும், அரங்குகள் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் ஹலோ ஈவண்டஸ் 9843615157, 9843015157, 9790959357, 8098984545 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். இந்நிகழ்ச்சியினை பொதுமக்கள் காண்பதற்கு அனுமதி இலவசம்.

## அமெரிக்காவில் காணாமல் போன ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இந்தியர்கள் சடலமாக மீட்பு




புதுடெல்லி, ஆக.05-

அமெரிக்காவில் காணாமல் போன ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இந்தியர்கள் சடலமாக மீட்கப்பட்டனர். அவர்கள் கார் விபத்தில் சிக்கி உயிரிழந்தது தெரியவந்துள்ளது. இந்தியர்களான கிஷோர் திவன் (89), ஆஷா திவன் (85), ஷைலேஷ் திவன் (86) மற்றும் கீதா திவன் (84) ஆகிய 4 பேரும் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வசித்து வந்தனர்.

இவர்கள் கடந்த வாரம் மேற்கு வர்ஜினியாவின் மார்ஷல் மாவட்டத்தில் உள்ள பிரபுபடாஸ் பேலஸ் ஆப் கோல்டு என்ற புகழ் பெற்ற கோயிலுக்கு காரில் பயணம் செய்துள்ளனர். இந்நிலையில் ஜூலை 31ம் தேதி முதல் அவர்களை தொடர்புகொள்ள முடியவில்லை என குடும்பத்தினர் காவல் துறையில் புகார் செய்துள்ளனர்.

ஒஹியோ மாவட்ட போலீஸார் விசாரணை நடத்தினர். அப்போது, பிக் வீலிங் கிரீக் சாலையில் அவர்கள் சென்ற கார் விபத்தில் சிக்கி இருந்தது ஆகஸ்ட் 2ம் தேதி தெரியவந்தது. அங்கிருந்து அந்த 4 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன. இந்த தகவலை மார்ஷல் மாவட்ட அதிகாரி மைக் டவுகெர்டி தெரிவித்துள்ளார். இதுகுறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.




## காட்பாடி அடுத்த பிரம்மபுரம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று பார்வையிட்டு சிறப்புரை

வேலூர், ஆக.05-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரம் ஊராட்சி, பிரம்மபுரம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி தொடங்கி வைத்து, புதிய மின்னணு குடும்ப அட்டையில் உறுப்பினர் பெயர் சேர்த்தல் கோரி மனு அளித்த பயனாளிக்கு பெயர் சேர்த்தல் செய்த ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார், காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.சரவணன், பிரம்மபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ராதாகிருஷ்ணன், வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், வருவாய் துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, மின்சார துறை, வேளாண்மை துறை போன்ற அனைத்து துறை அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் புகார் மனுக்களை பதிவேற்றம் செய்தனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 6.8.2025 அன்று

## காரைக்குடி மாநகராட்சி, மானாமதுரை நகராட்சி, திருப்புவனம், காளையார்கோவில், சிங்கம்புணரி, இளையான்குடி ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 6ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 12, 13, 14 ஆகிய பகுதிகளுக்கென காரைக்குடி முத்து தங்க மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 6,14,15,16 ஆகிய பகுதிகளுக்கென பார்த்திபனூர் ரோட்டில் அமைந்துள்ள ஆர்.சி. சர்ச் மஹாலிலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட டி.ஆலங்குளம், கீழசொரிகுளம், மேலசொரிகுளம், முதுவன்திடல், பிரமனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென பிரமனூர் நடுநிலை பள்ளியிலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மறவமங்கலம், சிரமம், சேதாம்பல், உசிலங்குளம், வேளாரேந்தல் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மறவமங்கலம் லெட்சுமி மஹாலிலும், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சதுர்வேதமங்கலம், வையாபுரிபட்டி, செல்லியம்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சதுர்வேதமங்கலம் சமுதாயக்கூடத்திலும்,

இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முனைவென்றி, பிராமண குறிச்சி, எஸ்.காரைக்குடி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முனைவென்றி ஊராட்சியிலுள்ள அறிவொளிநகர் சமூதாயக் கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ”உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

## ராசிபுரம் அம்மன் கோயிலில் ஆண்கள் மட்டுமே பங்கேற்ற விழாவில் 230 கிடாக்கள் வெட்டி கறிவிருந்து: விடிய விடிய நடந்தது

ராசிபுரம், ஆக.05-

ராசிபுரம் அருகே, பொங்கலாயி அம்மன் கோயிலில், ஆண்கள் மட்டுமே கலந்து கொள்ளும் திருவிழா நடந்தது. இதில் நேர்த்திக்கடனுக்காக விடப்பட்ட 230 கிடாக்களை பலியிட்டு கறி விருந்து வழங்கப்பட்டது. நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகேயுள்ள மலையாம்பட்டி கிராமத்தில் மிகவும் சக்திவாய்ந்த மலையாள தெய்வம் பொங்கலாயி அம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் வருடந்தோறும் ஆடி மாதம் திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டும் திருவிழா நேற்று இரவு நடைபெற்றது. விழாவில் போதமலையை சேர்ந்த மலையாள பூசாரி நள்ளிரவில் சுவாமிக்கு பூஜை, அபிஷேகம் செய்தார். தொடர்ந்து



200க்கும் மேற்பட்ட கிடாக்களை பலியிட்டனர்.

முன்னதாக பொங்கலாயி அம்மனுக்கு பெண் ஆட்டினை பலியிட்டு படையல் செய்த பின்பு, கிடாக்கள் வெட்டி சமபந்தி விருந்தினை ஏற்பாடு செய்தனர். இந்த விழாவில் ஆண்கள் மற்றும் சிறு குழந்தைகள் மட்டுமே பங்கேற்றனர். பூஜைகள் முடிந்த பின்னர் ஆண்கள் மட்டும் நீண்ட வரிசையில் நின்று சமபந்தி கிடா விருந்து சாப்பிட்டனர். இந்த விழாவில் சென்னை, நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விருந்து விடிய விடிய நடந்தது. இன்று மதியம் வரை விருந்து நடைபெற்றது.

மொத்தம் 230கிடாக்களை வெட்டி விருந்து பரிமாறப்பட்டது. வேண்டுதலுக்காக வாங்கி கொடுக்கப்படும், கிடாக்கள் கோயில் வளாகத்திலேயே சாமிக்கு பலி கொடுக்கப்பட்டு, அனைவருக்கும் சமபந்தி விருந்து வழங்குவதும், இதனை ஆண்கள் மட்டுமே சாப்பிடுவதும் 100 ஆண்டுகள் மேலாக கடைபிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



## மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 263 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி, ஆக.05-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 263 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர்ரஞ்ஜீத் சிங், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 263 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மேலும், இக்கூட்டத்தில் சில்வார்பட்டியை சேர்ந்த மாற்றுத்திறனாளியான ராமகிருஷ்ணன் என்பவர் தன் மகளின் உயர்கல்வி படிப்பிற்கு உதவித்தொகை கோரி மனு அளித்திருந்த நிலையில், அதற்கு உடனடி தீர்வாக மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.27,444/க்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முத்துமாதவன் (பொது), முகமதுஅலி ஜின்னா (கணக்கு), கதிர்வேல் (நிலம்), தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திருமதி சாந்தி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி சம்பூர்ணம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி காமாட்சி மற்றும் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெறுவதையொட்டி விண்ணப்பங்கள் மற்றும் மடிப்பேடுகளை தன்னார்வலர்கள் பொதுமக்களுக்கு வழங்குவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.05-

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் திட்டுவிளை பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் மற்றும் மடிப்பேடுகளை தன்னார்வலர்கள் வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கி அவர்களிடையே, விளக்கி கூறுவுதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு, பல்வேறு திட்டங்களை அறிவித்து, மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.



அதனைத்தொடர்ந்து தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து தரப்பட்ட பொதுமக்களின் குறைகளைத்தீர்க்க அவர்களின் பகுதிகளில் நேரில் சென்று முகாம்கள் நடத்தி பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற ஆக்கப்பூர்வமான புதிய திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள். அதனடிப்படையில்

அதனடிப்படையில் தன்னார்வலர்கள், சமுதாய வள பயிற்றுனர்கள், இல்லம்தேடி கல்வி பணியாளர்கள், சுயஉதவி குழுவினர், நகர்புற களப்பணியாளர்கள் வீடுகள் தோறும் சென்று, பொதுமக்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் முகாமில் வழங்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும், அதற்கான தகுதிகள் மற்றும் தேவைப்படும் ஆவணங்கள் குறித்து விளக்கி கூறுவதோடு, மடிப்பேடுகள் மற்றும் விண்ணப்பங்களை வழங்கி வருகிறார்கள்.

அதன்ஒருபகுதியாக இன்று தேவாளை வட்டம் திட்டுவிளை பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் வீடுகளுக்கு தன்னார்வலர்கள் நேரில் சென்று உங்களுடன் ஸ்டாலின் திட்ட விண்ணப்பங்கள் மற்றும் மடிப்பேடு வழங்கி, பொதுமக்களிடையே விளக்கி கூறுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் பொதுமக்களிடம் அவர்களுடைய தேவைகள் குறித்து கேட்டறியப்பட்டதோடு, அதற்கான திட்டங்கள், அத்திட்டங்களுக்கு இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து எடுத்துரைத்தத்தோடு, தவறாமல் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து நமது மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடைபெற்று வருகிறது. முகாமில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு உடனடியாக சொத்துவரி பெயர்மாற்றம், பிறப்பு சான்றிதழ், மின் கட்டண பெயர்மாற்றம், புதிய மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு, வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், தொழிலாளர் நல வாரிய அட்டைகள், குடும்ப அட்டைகளில் பெயர்மாற்றம், முகவரி மாற்றம், ஆதார் அட்டைகளில் பெயர்மாற்றம், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு தீர்வுகள் மற்றும் அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் உங்கள் பகுதிகளுக்கு அருகில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, தெரிவித்தார்கள்.



## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஆக.05-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர்ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 363 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, தனித்துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்பு திட்டம்) சேக் அப்துல் காதர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தூர் ராஜன், உதவி ஆணையர் கலால் ஈஸ்வர நாதன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், இரணியம் ஊராட்சி ஜாங்கிட் நகரில் புதிய நியாய விலைக்கடையை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் , சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்டேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

தென்காசி, ஆக.05-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார் .

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 1184 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், வருவாய் கோட்டாட்சியர்கள் லாவண்யா (தென்காசி), கவிதா, (சங்கரன்கோவில்), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பாதுகாப்பு, விண்வெளி துறையில் ரூ.5,600கோடி முதலீடு

சென்னை, ஆக.05-

பாதுகாப்பு, விண்வெளித் துறையில் தொடர்புடைய 3 நிறுவனங்கள் தூத்துக்குடியில் ரூ.5,600 கோடி முதலீடு செய்துள்ளன. சக்தி குழுமம், அக்னிகுல் காஸ்மோஸ், எதர்னல் எக்ஸ்புளோரேசன் நிறுவனங்கள் ரூ.5,600 கோடி முதலீடு செய்துள்ளது. 3 நிறுவனங்கள் முதலீடுகள் மூலம் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.



கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட

## கடுக்கரை, காட்டுப்புதூர் மற்றும் திடல் ஊராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.05-

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடுக்கரை, காட்டுப்புதூர் மற்றும் திடல் ஊராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்த லைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடுக்கரை, காட்டுப்புதூர் மற்றும் திடல் ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் ரூ.7.06 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 29.03.2025 அன்று மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது தெரிசனங்கோப்பு கிராமத்தில், பழையாற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு பழையாற்றில் நீர் உறிஞ்சிக் கிணறு அமைத்து, நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு, கடுக்கரை, காட்டுப்புதூர் மற்றும் திடல் ஊராட்சிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3 தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி களில் சேகரிக் கப்பட்டு ஊராட் சிகளில் அமைந்துள்ள 18 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

மேலும் தெரிசனங்கோப்புக்குட்பட்ட பழையாற்றில் நடைபெற்று வரும் கூட்டுக்குடிநீர்திட்ட பணிகள் நேரில் ஆய்வு செய்யப்பட்டதோடு, பணிகளை விரைந்து முடிக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 9300 மக்கள் பயன்பெறுவார்கள். இத்திட்டமானது அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் ஜி.சி.ராஜன், உதவி நிர்வாக பொறியாளர் ஆல்வின்சி, உதவி பொறியாளர் ஷிபின், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், ஆக.05-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 290 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.



தொடர்ந்து ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு மரணமடைந்த நபரின் வாரிசுதாரருக்கு பணி நியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு , மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி , மாவட்ட வழங்கல் அலுவலர் மணிமாறன் , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## ஸ்ட்ரோக்ஸ் அன் சிப்ஸ் ஃபை டிவைன் சார்பில் உலகப் புகழ்பெற்ற தங்க கோயில், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி சக்தி அம்மாவின் 50ஆம் ஜெயந்தி விழா முன்னிட்டு பூப்பந்து போட்டி

வேலூர், ஆக.05-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அரியூர் அடுத்த திருமலைக்கோடி, உலகப் புகழ்பெற்ற தங்க கோயில் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில், ஸ்ட்ரோக்ஸ் அன் சிப்ஸ் ஃபை டிவைன் சார்பில் ஸ்ரீ சக்தி அம்மாவின் 50ஆம் ஜெயந்தி விழா முன்னிட்டு, ஸ்ட்ரோக்ஸ் அன் சிப்ஸ் ஃபை டிவைன் டிவைன் ஏற்பாட்டில் ஸ்ரீ நாராயணி குழும நிறுவனங்களின் இயக்குனர் மற்றும் அறங்காவலர் என்.பாலாஜி தலைமையிலும், ஸ்ரீ சுகி பார்மா மற்றும் டிவைன் குழுமங்களின் இயக்குனர் ஸ்ரீகாந்த் முன்னிலையிலும் இப்போட்டி நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக அணைக்கட்டு எம்.எல்.ஏ. நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்தனர். இப்போட்டி இந்த விளையாட்டின் மூலம் உடலுக்கு ஆரோக்கியமான மகிழ்ச்சியும் உற்சாகமான திறமை களையும், சுறுசுறுப்பையும் வெளிப்படுத்தும் விதமாக உள்ளதாகவும், இப்போட்டியில் கலந்து கொண்ட விளையாட்டு வீரர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வின் போது திமுகவைச் சேர்ந்த நிர்வாகிகள், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழுமம், மருத்துவமனை, டிவைன் கஃபே, சுகி பார்மா, பள்ளி மற்றும் ஸ்ரீ நாராயணி குழும அலுவலர்கள், பணியாளர்கள், பக்தர்கள் என பலர் பங்கேற்றனர்.




## வேலூரில், காப்பீட்டு கழக ஊழியர் சங்கம் 38-வது பொதுமாநாடு மற்றும் பணிநிறைவு பாராட்டு விழா

வேலூர், ஆக.05-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்தி நகர் மேற்கு, தோழர்கள் சன்யால் தேவராஜ் நினைவரங்கம், பி.டி.எம் மஹாலில், காப்பீட்டு கழக ஊழியர் சங்கம் 38வது பொதுமாநாடு மற்றும் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் முன்னாள் பொதுச் செயலாளர் எஸ்.ராமன் பணி நிறைவு பாராட்டு விழா, வேலூர் கோட்டம் தலைவர் பி.எஸ். பாலாஜி தலைமையிலும், வேலூர் கோட்டம் பொதுச் செயலாளர் எஸ்.பழனிராஜ் வரவேற்புரையில், அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கம். பொதுச் செயலாளர் ஸ்ரீகாந்த் மிஸ்ரா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநா ட்டை துவக்கி வைத்து, காப்பீட்டு கழக ஊழியர் சங்கத்தின் புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்து சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற ஊழியர்கள் விளையாட்டு வீரர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இணை செயலாளர் எம்.கிரிஜா, முதுநிலை கோட்ட மேலாளர் வேலூர் கே.ஜனார்த்தனன்செட்டி, துணைத் தலைவர் சி.முத்துக்குமாரசாமி, மாவட்ட செயலாளர் எஸ்.டி.சங்கரி, தென் மண்டல செயலாளர் ஜே.கே.என். பழனி, முதல் பொதுச்செயலாளர் வேலூர் ஆர்.ஜெகதீசன், கோட்ட செயலாளர்கள் டி,செந்தில்வேல், வி.கே.ரவிச்சந்திரன், என்.சரவணன், வி.மணி, எஸ்.ரமேஷ் மற்றும் வேலூர் மாநகர தொழிற்சங்க கூட்டமைப்பு அமைப்பாளர் சி.ஞானசேகரன், முன்னாள் பொதுச் செயலா ளர்கள் கே.சுவாமி நாதன், எஸ். ராமன் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு சங்கத்தை மென்மேலும் வலிமையாக செயல்முறை ப்படுத்த வேண்டி சிறப்புரையாற்றி வாழ்த்துரை வழங்கினர்.

மேலும், செயற்குழு அறிக்கை, வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்து கலந்துரையாடி, பிரதிநிதிகள் மாநாட்டின் தொடர்ச்சியாக, அறிக்கை மீதான கருத்துக்கேட்பு, அகில இந்திய தென் மண்டல தலைவர்களின் சிறப்பு தொகுப்புரை மற்றும் வளர்ச்சிக்கான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றி, புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து கௌரவித்து விழாவை சிறப்பித்தனர். இறுதியில் தென் மண்டல செயற்குழு உறுப்பினர் கே.வி.பாலகுமார் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.

முடிச்சூர் இந்திரா நகர் பகுதியில் மாநில அரசு மேம்பாட்டு நிதியின் கீழ் ஒரு கோடியே 43 லட்சம் மதிப்பீட்டில்

## புதிய மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணியினை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்

முடிச்சூர், ஆக.05-

செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சிக்கு உட்பட்ட இந்திராநகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்து தர பொதுமக்கள் கோரிக்கை ஏற்று மாநில அரசு மேம்பாட்டு நிதியின் கீழ் ஒரு கோடியே 43 லட்சம் மதிப்பீடு ஒதுக்கீடு செய்து புதிய மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு புதிய மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.



இதனைத் தொடர்ந்து முடிச்சூர் பகுதி பொது மக்களு டைய கோரிக்கை களை கேட்டறிந்தார்.

இந்த நிகழ்ச்சியில் வார்டு உறுப்பினர் சாந்தி ரமேஷ், மணிகண்டன், வி.ஆர் குமார், இந்திரா நகர் கிளைச் செயலாளர் ரமேஷ், கே.சுகுமார், முடிச்சூர் ஊராட்சி செயலாளர் வாசுதேவன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தாமோதரன் மற்றும் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்

தமிழக அரசின் தொழிற் மையம் சிப்காட் அமைப்பதற்காக விவசாய நிலங்களை கையகப்படுத்த அரசு முயற்சிப்பதை கைவிட வலியுறுத்தி

## அந்த கிராம விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் விளைந்த வேர்க்கடலை செடிகள் மற்றும் சேமகிழங்கு செடிகளை கொண்டுவந்து கண்ணீர் மல்க கோரிக்கை மனு

வேலூர், ஆக.05-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, மகிமண்டலம் பஞ்சாயத்துக்குட்பட்ட மேட்டுப்பாளையம், தாதிரெட்டி பள்ளி, அம்மாவார்பள்ளி, பாலமத்தூர், உள்ளிட்ட ஏழுக்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விவசாய பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு, விவசாய நிலத்தில் பயிரிட்டு வளர்த்து வந்த வேர்க்கடலை செடிகள் மற்றும் சேமகிழங்கு செடிகளை கையில் கொண்டு வந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கண்ணீர் மல்க அழுதபடி மனு அளித்துள்ளனர்.



மேலும், இது குறித்து அப்பகுதி விவசாய பொதுமக்கள் கூறுகையில் எங்கள் பகுதியில் எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாமல், சிப்காட் அமைப்பதற்காக அதிகாரிகள் நிலத்தை அளப்பதற்காகவும் கணக்கெடுப்பதற்காகவும் வருகின்றார்கள், அதற்காக வரும் அதிகாரிகள் அத்துமீறி எங்கள் நிலங்களுக்குள் சென்று மரங்களை கணக்கெடுப்பதும் தோராய நிலங்களை அளப்பதுமாக உள்ளார்கள் நாங்கள் பயிரிட்ட நிலங்களில் செருப்பு, சூ காலுடன் பயிர்களை மிதித்து சேதப்படுத்தி வருகின்றனர் எனவும், பலமுறை வரும் அதிகாரிகளிடம் எதற்கு இந்த வேலையை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு பெண்களிடம் அவதூறாக பேசி வருகின்றார்கள் என கூறுகின்றனர்.

மேலும், சிப்காட் அமைப்பதற்கு எங்கள் நிலங்களை அரசு கையகப் படுத்தும் திட்டத்தில் உள்ளது என்பது தெரியவந்துள்ளது 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும் செலுத்தி பட்டா நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வருகின்றோம். சிப்காட் நாங்கள் வாழும் கிராமத்தின் அருகாமையில் அமைத்தால் எங்களுக்கு மட்டுமின்றி அருகில் வனப்பகுதியில் வாழும் வனவிலங்குகளும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது எனவும், நாங்கள் வாழும் பகுதி விவசாய பகுதி என்பதால் அடுத்த தலைமுறை பிள்ளைகளுக்கு விவசாயம் என்றால் என்னவென்றே தெரியாத நிலை ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகையால் எங்கள் பகுதியில் சிப்காட் அமைக்கும் திட்டத்தை உடனடியாக அரசு கைவிட வேண்டும் உயிரே போனாலும் நாங்கள் எங்கள் நிலங்களை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கிராம விவசாய மக்கள் கண்ணீர் விட்டு அழுது கோரிக்கை வைத்துள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு புதிய உதவி காவல் கண்காணிப்பாளராக (ASP) ஆஷிஷ் புனியா நேற்று (ஆக-04) பொறுப்பேற்றுக் கொண்டார்.



■ தாராபுரம் பத்திரப்பதிவு அலுவலகம் அருகில் அமைக்கப்பட்டு வரும் ஒன்றிய அலுவலக கட்டுமான பணிகளை மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். கட்டுமான பொறியாளர்களிடம் கட்டிடத்தின் உறுதித் தன்மை மற்றும் தரம் போன்றவைகளை கேட்டறிந்தார் உடன் அரசு அதிகாரிகளும் திமுக ஒன்றிய நிர்வாகிகளும் ஒன்றிய செயலாளர் ஷிகூஷிஷி செந்தில் குமார், சன் பாலு ஆகியோர் உடன் இருந்தனர்.



## நீலகிரி சரிந்து வரும் மலைகள்; அகலமாகும் சாலைகள்

நீலகிரி, ஆக.05-

நீலகிரி மாவட்டம். இதன் சிறப்பு அம்சங்கள். இங்கு இயற்கை வளங்கள் நிறைந்த மாவட்டம் ஆகும். இங்கு அதிகமாக இருப்பது தேயிலைத் தோட்டமும், காப்பி தோட்டங்களும், தேயிலை தொழிற்சாலைகள் பல இருக்கின்றது. இங்கு என்றுமே சீதோசன வெப்பநிலை குளிராகவே இருக்கும். இங்கு சுற்றுலா பயணிகள் சுற்றிப் பார்க்க அதிகமாக ஸ்தலங்கள் உள்ளன. இதனால் இந்தியாவிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பயணிகள் அதிகமாக வந்து போகும் இடமாக இருக்கிறது. இதன் காரணமாக பொருளாதாரப் பெருகி வருகிறது. வெளிநாடுகளுக்கு டீ தூள், காபித்தூள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் சீதோஷ்ண வெப்ப நிலைக்கு தோட்டங்களில் முக்கியமான பயிராக கேரட், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் ,பீன்ஸ், வாசனை திரவியங்கள் தயாரிக்க இங்கு நறுமண பூக்கள் பயிர் செய்து வருகின்றனர். பல நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்கு பருவமழை காலங்கள் ஆரம்பித்த உடன். மலைகள் அதிகமாக பெய்கின்றனர். இதனால் பல இடங்களில். மண் சரிந்து சாலை மார்க்கத்தில் வந்து விழுகின்றது. இதனை அப்புறப்படுத்தும் பணியில். மேட்டுப்பாளையம், குன்னூர், நெடுஞ்சாலையின் வழியாக சரிந்து விழுகிறது. மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலைத்துறை அதிகாரி. உதவி கோட்ட பொறியாளர் ரஜினிகாந்த், உதவி பொறியாளர் பூபாலன், நெடுஞ்சாலை பணியாளர்களை வைத்து. சரிந்த மண்களை அகற்றி, மேலும் சரிவு ஏற்படாத வகையில் வலைகளை கட்டி வருகின்றன. சரிந்த மண்களை எதிரே கொட்டி அது சரியாமல் இருக்க கல்களை அடுக்கி வலைகளை கட்டி சிமெண்டால் பூசப்பட்டு பின்பு மேல் பரப்பில் கம்பிகளால் கட்டி மேலும் சரியாமல் இருக்க காங்கிரட்டுகள் அமைத்து வருகின்றன. இதன் வேலைகளை உடனுக்குடன் செய்து வரும் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் ரஜினிகாந்த், மற்றும் உதவி பொறியாளர் பூபாலன், இவர்களை ஊர் மக்களும் சமூக ஆர்வலர்களும் பாராட்டி நன்றிகளை தெரிவித்தனர்.

## "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 5.8.2025 அன்று காரைக்குடி மாநகராட்சி, மானாமதுரை, தேவகோட்டை நகராட்சிகள், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, திருப்பத்தூர், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

சிவகங்கை, ஆக.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 5ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 20,21,24 ஆகிய பகுதிகளுக்கென சத்குரு ஞானாநந்தா மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 24,25 ஆகிய பகுதிகளுக்கென கோபால் இந்திரா மஹாலிலும், தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:3,8,9 ஆகிய பகுதிகளுக்கென கௌரி மஹாலிலும், நாட்டரசன்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 7 முதல் 12 வரையுள்ள பகுதிகளுக்கென வைத்தீஸ்வரன் தெருவிலுள்ள நாட்டரசன்கோட்டை சமுதாயக்கூடத்திலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ரணசிங் கபுரம், திருவுடையார்பட்டி மற்றும் கோட்டையிருப்பு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கோட்டையிருப்பு ஊராட்சியிலுள்ள சமூதாயக்கூடத்திலும், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட லாடனேந்தல், டி.வேலங்குளம், செல்லப்பனேந்தல் மற்றும் தூதை ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென லாடனேந்தல் ஊராட்சியிலுள்ள வேலம்மாள் திருமண மண்டபத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவண ங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161